வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 5/2019

வழக்குசாட்சி LW12/PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சித்ரா, காவல் ஆய்வாளர், உயர்நீதிமன்ற வழக்குகள் கண்காணிப்பு பிரிவு சென்னை | ஜாதி | |
| கணவர்/தந்தை | கணேசன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 46 |

தேதி 11.05.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது அயல்பணியாக தேர்தல் கட்டுப்பாட்டு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.04.2017ம் தேதி நிலைய அலுவலலில் உதவி ஆய்வாளர் திரு. ஞானசேகர் இருந்த போது காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்து 20.35 மணி அளவில் GNT ரோடு NDR குடோன் அருகே சாலையில் விபத்து ஏற்பட்டதாக கிடைத்த தகவலின் பேரில் சம்பவ இடம் சென்று பார்வையிட்ட போது சம்பவத்தில் காயமுற்ற நபர் 108 ஆம்புலன்ஸ் மூலம் ஸ்டேன்லி மருத்துவமனை சென்றுவிட்டதாக தகவலின் பேரில் மருத்துவமனை சென்று காயமுற்ற நபர் சிகிச்சையில் இருந்த்தால் உடன் இருந்த அவரது சகோதர்ரனா அமிர்தலிங்கத்தினடம் இருந்து புகாரினைப்

பெற்றார். புகாரினை பெற்று நிலையம் GNT மாதவர போக்குவரத்து புலனாய்வுக் காவல் நிலையக் குற்ற எண் 178/2017 கீழ் இதச பிரிவுகள் 279, 338 கீழ் முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்பு இவ்வழக்கின் வாதியான அமிர்தலிங்கம் என்பவரை விசாரணைச் செய்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். பின்னர் சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சி உதயங்கர், ரஞ்சித்குமார், ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். மேற்படி பார்வை மகஜர், மாதிரி வரைபடமானது அ.த.சா.ஆ 4, 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சாட்சிகள் உதயங்கர், ரஞ்சித்குமார், என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் சேகரித்தேன். பின்னர் கண்ணுற்ற சாட்சி குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தார். பின்னர் காயமுற்ற நபர் அன்று இரவே 09.30 மணியளவில் சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டதாக ஸ்டேன்லி அரசு மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட தகவலினை அடுத்து ஆய்வாளர் பழனி அவர்களிடம் வழக்கு கோப்பானது ஒப்படைக்கப்பட்டது. இவ்வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஆய்வாளர் சம்பவத்தினையும், சாட்சிகளையும், சம்பவ இடத்தையும் விசாரணை செய்தார். 10.04.2017 தேதி இவ்வழக்கில் இறந்துபோன ஏழுமலை, ஆ/43 என்பவரை உறவினர்கள் ஸ்டான்லி அரசு மருத்துவமனை சவகிடங்கு வைத்த இடத்தை அடையாளம் காட்டினார்.

10.04.2017 தேதி மதியம் 12.30 முதல் 14.00 மணிவரை அரசு ஸ்டான்லி மருத்துவமைனை சவகிடங்கு அருகில் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேதத்தை பிரேத விசாரணை செய்தேன். மேற்படி பிரேத விசாரணை அறிக்கையானது அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சட்டப்பிரிவினை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையினை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். மேற்படி

சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையானது அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யவேண்டி சிறப்பு உதவி ஆய்வாளர் பாபு என்பவர் மூலம் விண்ணப்பம் கொடுத்தேன். பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திருமதி. பிரியதர்ஷினி என்பவரை விசாரித்து வாக்குமூலம் சேகரித்தேன். மேற்படி இறந்த நபரின் பிரேத பரிசோதனை அறிக்கையானது அ.த.சாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் விபத்தினை ஏற்படுத்திய காரின் ஓட்டுநர் சந்தோசம் என்பரை அவருடைய ஜெயச்சந்திரன் என்பவர் 10.04.2017 மாலை 17.00 மணிக்கு நிலையத்தில் ஆஜர் செய்ய சந்தோசம் என்பரை விசாரிக்க அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதால் மாலை 18.00 மணிக்கு அவரை கைது செய்து பின்னர் நிலைய பிணையில் விடுவிடுக்கப்பட்டார். ஜெயச்சந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்யப்பட்டது.

11.04.2017 தேதி மாலை 05.10 மணிக்கு இவ்வழக்கில் சம்மந்த்ப்பட்ட விபத்து ஏற்படுத்திய காரின் பதிவு எண். TN 5 AQ 9327 என்ற வாகனத்தை ஆய்வாறிக்கு உட்படுத்தினர். பின்னர் ஆய்வாளர் பணிமாறுதலில் செல்லவே ஆய்வாளர் பொறுப்பிற்கு வந்த நான் வழக்கு கோப்புகளை பார்வையிட்டு சாட்சிகளிடம் விசாரணைச் செய்த்தில் முன்னர் கூறியதையே கூறியதால் மறுவாக்குமூலம் எதுவும் பதிவுச் செய்யவில்லை. பின்னர் 31.05.2017 இறந்த நபர் ஓட்டி வந்த இருச்சக்கர வாகன பதிவு எண் TN 18 L 7574 வாகன தணிக்கைகாக மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 திரு. மாணிக்கம் என்பவரிடம் ஆஜர் படுத்தி வாகன தணிக்கை சான்று பெற்றேன். வாகன ஆய்வாளர் மாணிக்கம் என்பரை விசாரித்து வாக்குமுலம் பெற்றேன். மேற்படி வாகன தணிக்கை அறிக்கையானது அ.த.சா.ஆ. 9, 10 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. இவ்வழக்கில் விசாரணை குறித்து 31.05.2017 ஆம்

தேதி சட்டப்பிரிவுகள் 279, 304( A) இதச பிரிவுபடி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவ இடம் பிரதான சாலை என்றால் ஆமாம். போக்குவரத்து அதிகம் உள்ள சாலை என்றால் ஆமாம். சம்பவ நேரம் இரவு நேரம் என்றால் ஆமாம். சம்பவத்தில் இறந்த நபர் சாலையில் கடக்கும் போது விபத்து நடந்தது என்றால் ஆமாம். சம்பவ இடத்தில் சிக்னல் இல்லை என்றால் சரிதான். பிரதான சாலை என்பதால் சாலையை கடப்பவர்கள் இருபுறமும் பார்த்து தான் செல்ல வேண்டும் என்றால் ஆமாம். இருபுறமும் சாலையை பார்த்து கடந்திருந்தால் விபத்து ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் ஆமாம். சம்பவ இடத்தில் நடுவில் தடுப்பு சுவர் இல்லை என்றால் சரிதான். தற்போது தான் தடுப்பு சுவர் எழுப்பப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 200 மீட்டர் தொலைவில் இருந்து சம்பவத்தை சரியாக பார்க்க முடியாது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் அ.சா.1 இறந்த நபரின் உடன் பிறந்த சகோதரர் என்றால் ஆமாம். நேரடியாக பார்த்த சாட்சி யாரும் இல்லாததால் அவரது சகோதரரை கண்ணுற்ற சாட்சியாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. கண்ணுற்ற சாட்சி யாரும் இல்லாத்தால் வாக்குமூலம் என்பது பொய்யாக பெறப்பட்டது என்றால் சரியல்ல. வரைபடத்தில் தடுப்பு சுவரானது இல்லாத நிலையில் இருந்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் தடுப்பு சுவரானது தரைமட்டமாக இருந்தது. தடுப்பு என்பது கடந்து செல்வது போன்று தான் உள்ளது.

சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி குற்றத்தினை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் ஏதும் கொடுக்கவில்லை என்றாலும் நானாகவே கொடுத்தாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் இறந்த நபருக்கு இழப்பீடு தொகை

கிடைக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக இவ்வழக்கு பதிவுச் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.